**செய்தி வெளியீடு எண்:054** **நாள்: 25.01.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

சவூதி அரேபிய அமைச்சகத்தின் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு இரண்டு வருட பணி அனுபவத்துடன் 30 வயதிற்குட்பட்ட பிஎஸ்சி/எம்எஸ்சி தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்களுக்கான எழுத்து மற்றும் வாய்மொழித் தேர்வு புதுடில்லியில் 27.1.2017 முதல் 29.1.2017 வரையிலும், கொச்சியில் 31.1.2017 முதல் 3.2.2017 வரையிலும் நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் எம்எஸ்சி செவிலியர்களுக்கு ரூ.95,000/- முதல் அனுபவத்திற்கேற்றவாறு அதிகபட்சமாக ரூ.1,10,000/- மற்றும் பிஎஸ்சி செவிலியர்களுக்கு ரூ.84,000/- முதல் 1,00,000/- வரை மாத ஊதியத்துடன் இலவச விமான டிக்கெட், உணவு, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்து, 30 நாட்கள் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சட்டதிட்டத்திற்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள செவிலியர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன், கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemclsn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 26.1.2017க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

மேலும் விவரங்களுக்கு 044-22505886/22502267 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது www.omcmanpower.com என்ற இந்நிறுவன வலைதளத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**